தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 11.11.2022

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மக்காச்சோளத்திற்கான விலை முன்னறிவிப்பு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழத்தில், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டமானது, மக்காச்சோளத்திற்கான விலை முன்னறிவிப்பை உருவாக்கியுள்ளது.

இந்தியாவில் 9.89 மில்லியன் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 31 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவிலிருந்து சுமார் 0.36 மில்லியன் டன்கள் மக்காச்சோளம் மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்தியாவில் கர்நாடகா, மத்தியப்பிரதேசம், மகாராஷ்ட்ரா, தமிழ்நாடு, மேற்குவங்கம், ராஜஸ்தான் மற்றும் பீஹார் ஆகிய மாநிலங்கள் மக்காச்சோளத்தை அதிகளவு பயிரிடுகின்றன. நேபாளம், பங்களாதேஷ், மியான்மர், பாகிஸ்தான் மற்றும் பூட்டான் ஆகியவை மக்காச்சோளத்தை ஏற்றுமதி செய்யும் முக்கிய நாடுகளாகும்.

தமிழ்நாட்டில் 2020-21 ஆம் ஆண்டில் 0.4 மில்லியன் எக்டர் பரப்பளவில் 2.56 மில்லியன் டன்கள் மக்காச்சோளம் உற்பத்தி செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் சேலம், திண்டுக்கல், நாமக்கல், புதுக்கோட்டை, திருப்பூர், விழுப்புரம், பெரம்பலூர் மற்றும் அரியலூர் ஆகிய மாவட்டங்களில் அதிகளவில் மக்காச்சோளம் பயிரிடப்படுகிறது.

வர்த்தக மூலங்களின் படி மக்காச்சோளம் அதிகமாக பயிரிடப்படும் மாநிலங்களில் பயிரின் நிலைமை சீராக இருக்கிறது. கறிக்கோழி மற்றும் முட்டையின் தற்போதைய

விலை நிலவரம் மக்காச்சோளத்தின் விலையை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் அதிகரிக்கும் விலையானது, ஏற்றுமதி செய்யப்படும் நாடுகளை பொறுத்து அமையும். தென்னிந்திய மாநிலங்களில் மக்காச்சோளத்தின் மகசூலில் வடகிழக்கு பருவமழையின் தாக்கம் இருக்கும் எனவும் நம்பப்படுகிறது.

விலைமுன்னறிவிப்பு திட்டமானது, கடந்த 27 ஆண்டுகளாக உடுமலைப்பேட்டை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நிலவிய மக்காச்சோளம் விலை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வுகளின் அடிபடையில், தரமான மக்காச்சோளத்தின் பண்ணை விலையானது குவிண்டாலுக்கு ரூ.1900 முதல் ரூ. 2000 ஆக இருக்கும். எனவே, விவசாயிகள் மேற்கூறிய ஆலோசனையின் அடிப்படையில் சந்தை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலை பேசி – 0422 – 2431405.

இயக்குனர் மற்றும் முனை அதிகாரி
தமிழ்நாடு பாசன விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
நீர் தொழில் நுட்ப மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641003
தொலைபேசி-0422-2431405

**தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்
சிறு தானிய துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641003
தொலைபேசி-0422-2450507

**மக்கள்தொடர்பு அலுவலர்**